211

மலர் 2

# ஜைன தருமம்

அல்லது

## ஜைனசமயம் உலகிற்குத் தருவதுயாது?

சென்னைப் பச்சையப்பன் கல்லூரி ஆங்கில
உதவிப் பேராசிரியர்

எஸ். ஏ. ஜைன், எம். ஏ., அவர்கள்

ஆங்கிலத்தில் எழுதியது

★

சென்னை - செளகார்பேட்டை
ஸ்ரீ ஏ. ஜி. ஜைன் ஹை ஸ்கூல், தமிழாசிரியர்
சுகவனம் - சிவப்பிரகாசனுர்
மொழிபெயர்த்தது.

★

நன்கொடையாளர்:
ஸ்ரீ அமோலக் சந்த் கேலடா தர்மநிதி

★

பதிப்பாளர்:
[illegible]கம், செளகார்பேட்டை
சென்னை
1947

MADRAS
30 APR
Q3
N47
113415

Q3
N47
113415

# ஜைன தருமம்

அல்லது

## ஜைனசமயம் உலகிற்குத் தருவதுயாது?

——: o :——

சென்னை பச்சையப்பன் கல்லூரி ஆங்கில
உதவிப் பேராசிரியர்

எஸ். ஏ. ஜைன். எம். ஏ. அவர்கள் எழுதியது

[எல்லா உரிமைகளும் ஆசிரியருடையவை]

---

**ஜைன** தரிசனத்தில் தத்துவம், மதம், ஒழுக்கம் ஆகியவை ஒன்றற்கொன்று தொடர்புகொண் டிருக்கின்றன. அதனால் அவை ஆன்மாவின் நலனுக்காக மனித சக்தியை இறுதியான பூரண நிலையை அடையத்தக்க வழியில் புகுத்துவதில் இன்றியமையாதனவாய் இருக்கின்றன. தனிப்பட்ட ஒவ்வொரு ஆன்மாவின் இலட்சியமும் தன்னை யறிவது; அதாவது தன் உண்மைத் தன்மையைப் பெறுவதே யாகும். அதுதான் நித்தியானந்தம் என்றும், அதை யடைந்தபின் அதிலிருந்து எவரும் மீள்வதில்லை என்றும் கூறப்படுகின்றன.

பூரணத்தை எய்த விரும்பும் ஆன்மா நிர்மலமான நிலையை அடைய இடையறாது உழைக்க வேண்டும். உறுதியான நம்பிக்கையும் உண்மையான ஞானமும் கொள்ளவேண்டும். முயற்சி மட்டும் வெற்றிதாராது; ஆனால் யுக்திபூர்வகமான முயற்சியே வெற்றியைச் சாதிக்க வல்லது. எனவே, நன்னடத்தையாகிய ஒழுக்கம், வெற்றி பெறுவதற்கு மிகமிக முக்கியமானது. “மகோன்னதமானதும் உலகம் ஒப்பத்தக்கதுமான இலட்சியத்தைத் தரத்தக்கது சமயம். அதுவன்றி இலட்சியத்தைத் தேர்ந்து

TAMIL NADU ARCHIVES LIBRARY EGMORE MADRAS

கொள்வதற்காக, வாழ்க்கையின் வேறுபட்ட எல்லா நிலைகளி லும் உள்ள பல வாய்ப்புக்களிலே, எது தலை சிறந்தது என்று போதிக்க வல்ல ஞானமும் வேண்டும்'' உண்மை ஆன்ம தத்து வத்தை அடிப்படையாகக் கொண்டல்லது உயரிய ஒழுக்க விதிகளை அமைத்தல் முடியாது. உண்மையான ஞானம் இல்லாதபோது உறுதியான பற்றுக்கே இடமில்லை.

நம் நுண்ணறிவிற்கு எட்டாத சில உண்மைகளும் ஜைன சமய நூல்களில் காணப்படுகின்றன. அவை மகா வீரத்துடனும், மகா உண்மையாகவும் மக்களுக்கு உதவப்பட்டிருக்கின்றன. "எல்லாவற்றிற்கும் முதன்மையான ஒரே கடவுளால் இவ் வுலகம் படைக்கப்பட்டது; அவராலேயே இவ் வுலகம் ஆளப்படுகிறது'' என்னும் கொள்கைகளை ஜைனமதம் ஒப்புக் கொள்வதில்லை. உலகம் ஆதியும் அந்தமும் இல்லாதது. எனினும் சிறந்த விஞ் ஞானிகளுங்கூட வெகு காலத்துக்குப் பிறகு உலகம் அழிந்து விடும் என்று கருதுகிறார்கள். நினைவுக்கு எட்டாத காலம் முதல் உலகம் இருந்து வந்திருக்கிறது என்பது ஒப்புக் கொள்ளப்பட்ட போதிலும், அது மாறத்தக்கது என்பதை யாரும் மறுப்பதற் கில்லை.

"மார்வின்'' என்னும் ஓரறிஞர் தாம் ஆக்கியுள்ள "தத்துவ முறைக்கு முன்னுரை'' என்னும் ஓர் ஆங்கிலப் புத்தகத்தில் இதே கருத்தை வெளியிட்டிருக்கிறார். சிருஷ்டி பிரச்னையும், சிருஷ்டி சம்பந்தமான விதிகளும் ஒரே கருத்துடையன.

உலகம் பொருளையும் ஆவியையும் கொண்டது. அவை பெரும்பாலும் இணைந்தே காணப்படுகின்றன. என்றாலும் அவை ஒன்றற்கொன்று மாறுபட்டன. அவற்றின் தனித் தன்மையைக் கொண்டு அவற்றைப் பாகுபடுத்திக் கொள்ளலாம். ஆன்மாவின் தன்மையான உணர்வு (சைதன்ய குணம்), பொருள்களில் முற்றிலும் கிடையாது.

சித்தும் அசித்தும் ஒன்றுக் கொன்று அடியோடு மாறுபட் டவை. அவற்றின் தன்மைகளும் அதுபோலவே மாறுபட்டவை. ஒன்றை மற்றொன்றாக மாற்ற இயலாது. ஆகவே, ஏககாரண வாதம் ஸ்தாபிக்க முடியாதது. அவை இரண்டும் தனித்தனி யாக இருக்கின்றன; உண்மையானவை. எல்லாம் ஒரே பொருள் என்னும் அத்வைத கொள்கையை என்னதான் ஆராய்ச்சிசெய்து பார்த்தாலும் நிலைநாட்டமுடியாது. சித்து உல கம் முழுவதையும், தன்னுள் கொண்டுள்ளது என்பது ஆபாச வாதமாகும். அந்த முடிவு சித்துக்கே பாதகமானதுங் கூட.

சித்துக்கும் அசித்துக்குமுள்ள வேற்றுமை அடிப்படையானது; அதை அலட்சியப் படுத்துவதனால் பயனில்லை. பொருள்கள் போலியானவை; அவை உண்மையல்ல என்று மறுப்பது, விருப்பு வெறுப்பற்ற ஆராய்ச்சியாளர்களைத் திருப்திப்படுத்துவதாகாது.

சித்தோடு கலவாத சுத்தமானநிலையில் அசித்து அவ்வப்போது காணப்பட்டாலும், உடலோடு இணையாத நிலையில் நாம் ஆன்மாக்களைக் காணமுடியாது என்பது உண்மைதான். அசித்தினின்று ஆன்மாக்கள் அடியோடு விடுதலை பெறுங்காலத்தில் அவை மீட்சி பெறுகின்றன. பிறகு, உலகத்தின் உயர் நிலையை அவை உடனே அடைகின்றன. ஆகவே, சித்தைப் பற்றி நாம் பெற்றுள்ள அனுபவங்களெல்லாம் அது அசித்தோடு கலந்துள்ள நிலைமையில் மட்டுமேதான்.

சித்தான ஆன்மாவுக்கும் அசித்தான உடலுக்கும் உள்ள வேற்றுமை இதன் மூலம் தெளிவுபடுகிறது. சித்தை அசித்தாக மாற்றமுடியாது என்பதை நாம் உணருகிறோம். அப்படிப்பட்ட மாற்றம் நிகழக்கூடும் என்பதற்கான சான்று எதுவும் இதுவரையில் நமக்குக் கிடைக்கவில்லை.

எங்கும் வியாபித்துள்ளது "பிரம்மம்" என்னும் கொள்கையை அடிப்படையாகக் கொண்டுதான் அத்வைத மதம் அமைந்திருக்கிறது.

உலகத்திலுள்ள ஆன்மாக்களோ எண்ணிறந்தன. அவை ஒன்றற்கொன்று மாறுபட்டிருக்கின்றன. அவை கடைசியில் பூரணமான நிலையை அடையும் வரையில் உடலோடு இணைந்துதான் காணப்படுகின்றன, அதுமுதல் தூய ஆன்மாக்கள் உலகின் உயரிய நிலையிலேயே இருந்து வருகின்றன. அவைகளே கடவுள்கள்; வணக்கத்துக்கும் மதிப்புக்கும் உரியன அவையே. தூய ஆன்மாக்களெல்லாம் எல்லாத் துறைகளிலும் ஒரே வகையாய் இருக்கின்றன; அவை, எல்லாவற்றையும் அறியவல்லன; பூரண இன்பத்தில் திளைத்திருப்பன. பற்பல காலங்களில் அந்தப் பூரண நிலையை அடைவதனால் அவற்றின் நிஜகுணங்களைப் பற்றின மட்டில் அவற்றில் வேற்றுமை இல்லை.

மனிதன் சமீப காலத்தில் தோன்றியவன்தான் என்று உலகத் தோற்ற ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். அப்படியன்று. மகா முன்னேற்றமுள்ள உயிரினங்களில் மனிதன் அநாதி காலத்தேயே தொடங்கி உயிர்வாழ்வதாக ஜைனமதம் தெளிவுபடக் கூறுகின்றது. ஜைன நூல்களில் பாகுபாடுகள் குறிப்பிடப்

பட்டிருக்கின்றன என்பது உண்மைதான். உயிர்கள் படிப்படியாகப் பிரித்துக் கூறப்பட்டிருக்கின்றன. மாறுதல்களை நாம் நிராகரிக்க வேண்டுவதில்லை. அடுத்தடுத்துள்ள இரண்டு இனங்கள் மிகவும் நெருங்கிய சாயலுடையன என்னும் காரணத்தைக் கொண்டு அவற்றிற்கு இடையேயுள்ள வேற்றுமையை நாம் அலட்சியப் படுத்துவதற் கில்லை. உயிர் ஒரு கீழ்நிலையிலிருந்து ஒரு மேல்நிலையை அடைந்தது என்றும் கொள்வதிற்கில்லை. ஜைன சமயப்படி எண்ணிறந்த ஜீவராசிகள் இருந்திருக்கின்றன. அவற்றுள் ஒன்று அதை யடுத்துள்ள மற்றொன்றோடு கொண்டுள்ள வேற்றுமை மிக மிகச் சிறிதா யிருக்கலாம். ஆகவே, அதைக் கொண்டு ஒவ்வோரினமும் விருத்தி யில்லாததிலிருந்து விருத்தி யுற்றதாகக் கொள்வதற்கில்லை. உலகம் முழுவதும் அப்படிப்பட்ட மாறுதல் நிகழ்ந்திருக்கு மானால் அந்த முடிவை ஒப்புக் கொள்ளலாம். அதாவது, கீழ்நிலையி லிருந்த உயிர்கள் எல்லாம் மேல்நிலை அடைந்தன என்பது உண்மையானால் முன்கூறிய முடிவும் உண்மை யாகும். ஆனால் நடைமுறையில், உயர்நிலையில் உள்ளவற்றைவிட இழிநிலையில் உள்ளவையே எண்ணிக்கையில் அதிகம். உயிர்கள் படிப்படியாக உயர்ந்தன என்னும் கொள்கையை நாம் ஒப்புக்கொள்ள ஒட்டாதபடி யுள்ள பெருந்தடை இதுவே. அந்தக் கொள்கையினால் முக்கியமாக நாம் தெரிந்து கொள்வ தெல்லாம், உயிர்கள் சிறுசிறு பாகுபாடுகளாக வகுக்கப் பட்டிருக்கின்றன என்பது மட்டுந்தான்!

மற்றச் சமயங்களிலே சில குறைபாடுகள் கூறப்படுகின்றன. "உயிர்களைத் தோற்றுவித்த கடவுள் துன்பங்களையும் தொல்லையையும் ஏன் தோற்றுவிக்க வேண்டும்? அன்பு மயமான கடவுள் இறப்பையும், தீமையையும், பாவத்தையும் ஏன் உண்டாக்க வேண்டும்?" என்னும் கேள்விகள் எழுகின்றன. ஆனால் அந்தக் கேள்விகள் ஜைனசமயம் சம்பந்தப்பட்ட வரையில் கேட்கப்பட மாட்டா. உலகமும் ஆன்மாக்களும் ஆதிகாலந் தொட்டே இருந்து வந்துள்ளன. அவை தாமாகவே தோன்றியவை. ஆன்மாக்கள் களங்கங்களோடு இணைந்திருக்கின்றன; அஃதாவது அவரவருடைய இயற்கைக்கும் கடுமைக்கும் ஏற்றவாறு இன்ப துன்பங்களை உண்டாக்கும் கர்மத்தோடு இணைந்திருக்கின்றன. இந்த நிலையில் ஆன்மாக்கள் ஒருவிதக் கட்டுப்பாட்டுக்கு உள்ளா யிருக்கின்றன. ஆன்மாவோடு எந்த அளவிற்கு கர்மம் இணைந்திருக்கின்றதோ அந்த அளவிற்கு ஆன்மாவிற்கு விளங்கக்கூடிய இயற்கையறிவும் இன்பமும் மயங்கிக் கிடக்கின்றன. எனினும், ஆன்மாவின் நிஜத் தன்மைகளை எதனாலும் அடியோடு அழித்துவிட முடியாது; பிசாசினாலும் முடியாது! சமணசமயக்

கொள்கைப்படி முடிவில்லாத கொடுந்தண்டம் எந்த ஆன்மாவிற்கும் நேருவதற்கில்லை.

கட்டுப்பாட்டிலிருந்து தாமே தம்மை விடுவித்துக் கொண்டு பூரணத்துவம் அடைய ஆன்மாக்களால் முடியும். இதற்கு அவை பழைய காரணங்களை ஒழிக்க வேண்டும். அந்தக் காரணங்களின் பலாபலன்களை அமைதியோடும் பொறுமையோடும் சகிக்க வேண்டும். அதே சமயத்தில் புதிய காரணங்கள் உண்டாகாதபடி விருப்பு வெறுப்பற்றுத்தம் உண்மை நிலையில் சிந்தையைச் செலுத்தியிருக்க வேண்டும்.

செயல்களே ஆன்மாவிடம் கருமங்கள் நிகழ்வதற்குக் காரணம். ஆன்மாவின் கட்டுப்பாடு அதனாலேயே உண்டாகிறது. செயலற்ற நிலையிலிருந்தால் மேலும் கருமங்கள் தொடர இடமில்லை. நெடுநாளைய கருமங்களை ஒழித்துப் பூரண விடுதலையைப் பெறுவதற்குச் சிறந்த வழி தன்னில் தானே பதிந்து கிடப்பது தான்.

உண்மை மயமே ஜைன சமயம். பரிசுத்தமான—கலப்பற்ற—உண்மையைத்தான் ஜைன சமயம் தன்னுள் கொண்டிருக்கிறது. உலகிலுள்ள மற்ற சமயங்களினின்று ஜைனமதத்தைப் பாகுபடுத்திக் காட்டவல்ல தனிப் பெருமை இதுதான். அரைகுறை உண்மைகள்; வாய்மையற்றவை; அறிவிற்குப் பொருத்தமற்ற குயுக்திகள் ஆகியவை இதில் அடியோடு இல்லாதிருப்பது இதற்குத் தனிச் சிறப்பைத் தருகின்றது. இவை, அநேக பிற மதங்களிலிருந்து அந்த அந்த மதத் தத்துவங்களுக்குப் பாதகம் உண்டாக்குகின்றன. இப்பொழுது உலகிலுள்ள பெரும்பாலான சமயங்கள் இக்குற்றத்திற்கு உள்ளாகி யிருக்கின்றன. ஜைன சமயத்திலே பொருத்தமற்றவையோ ஒன்றுக்கொன்று மாறுபட்டனவோ இல்லை. உண்மையைச் சோதிப்பதற்கு இது தான் சிறந்த பரீட்சை. பெரிய பெரிய மதங்கள் பலவற்றிலுள்ள உயர்ந்த தத்துவங்கள் எல்லாம் தவறான—விசித்திரமான, அறிவுக்குப் பொருத்த மில்லாத—மூடக்கொள்கைகளோடு இணைந்திருக்கின்றன. அவற்றினின்று அவை விடுபடாத வரையில் மதப்பிற்போக்கைத் தடுக்க இயலாது.

அறிவியக்கம் மற்றொரு கட்டுப்பாட்டுக்கு உட்பட்டிருக்கிறது. அநுபவத்திற்கு முரண்பாடான விஷயங்களுக்கும், சிற்றறிவிற்கு எட்டாத விஷயங்களுக்கும் உள்ள வேறுபாட்டை அஃது அங்கீகரிக்க வில்லை. இவ் விரண்டு தவறுகளினின்றும் தவிர்த்து

இயற்கையின்படி உண்மையைப் புகட்டுவதே ஜைன சமயத்தின் சிறந்த நோக்கம்.

ஜைனசமயம் அறிவியக்கத்தவர்களுக்கு ஏற்றதாக இருக்கிறது. இருந்தாலும் அறிவியக்கத்தவர்களுடைய அகக்கண்களுக்கு அப்பாற்பட்டவைகளை ஜைனசமயம் அலட்சியப் படுத்தவில்லை: மனித அனுபவ எல்லைகளுக்கு அப்பாற் செல்லுகிறது. உண்மைகள் கடவுளால் உபதேசிக்கப்பட்டன என்று ஜைன சமயம் ஒப்புக் கொள்வதற்கு அத்தாட்சி உண்டு. புலன்களுடைய சிற்றறிவிற்கு எட்டாத அநேக நுட்பமான உண்மைகள் முழுதுமுணர்ந்த கடவுளாலன்றி மற்றவர்களால் கண்டு அறிய இயலாதன. ஆனல், கடவுளின் வாக்கியம் என்னும் மூட நம்பிக்கைக்கு இச்சமயம் இடம் கொடுப்ப தில்லை. எதையும் பரீட்சித்தே நாம் விஷயங்களை யூகித் தறிய வேண்டும். கடவுளால் சொல்லப்பட்ட உண்மைகள் இயற்கைக்கு விரோதமாகவும் அனுபவத்திற்கு மாருகவும் ஒருகாலும் இருக்கமுடியாது என்பது இவர்களது துணிபு. ஆகையால் நம் அனுபவத்திற்கு வரம்பில் உள்ள விஷயங்களைப் பற்றினவரையில் உண்மைக்கு மாருக நூல்களில் காணப்படுமேயாஞல் அவைகள் கடவுளால் உபதேசிக்கப்பட்டவையல்ல என்பதே சிறந்த தீர்மான மாகும். வேத வாக்கியங்கள் நம் பரீட்சைக்கு அப்பாற்பட்டவை. வேத வாக்கியங்கள் என்பதாலேயே நாம் அவைகளை உண்மையென்று ஒப்புக்கொள்ள வேண்டுமென்று ஒருசாரார் கூறுகின்றனர். அதுதவறு. எல்லாச்சமய நூல்களும் கடவுளால் உபதேசிக்கப் பட்டன என்று கூறப்படுகின்றன. ஆனல், ஒன்றிற்கொன்று முரண்பாடான விஷயங்களைக் கூறுகின்றன. எப்படி எல்லாம் உண்மையாக இருக்க முடியும்? எல்லாம் முழுதுணர்ந்த கடவுளின் உபதேசங்களாக இருக்கமுடியும்? ஆகவே, எதையும் தீரப் பரீட்சித்தே தீர்மானம் செய்யவேண்டும் என்பது எல்லாச் சமயத்தினராலும் ஒப்புக் கொள்ளுதற்குரிய கருத்து.

இந்த மதத்தின் தனிச் சிறப்பை உலகத்தோர் இன்னும் உணரவில்லை. துன்பத்தைத் துடைத்து இன்பத்தை அளிக்க வல்லவைகளையே உலகம் நாடுகிறது. அவற்றைத் தவருது அளிக்க வல்ல முறைகள் அறிவிற்குப் பொருத்தமான வகையில் இதில் வகுக்கப்பட்டிருக்கின்றன. உலகத்தைத் திகைக்கச்செய்த மகா சிக்கலான பிரச்னைகள் பல இதில் விளக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சமயத்தின் போதனைகள் தெளிவான முறையில் எல்லாவற்றையும் தம்முள் கொண்டுள்ள பெருமை வாய்ந்து இருக்

கின்றன. ஆகவே, அதன் தத்துவங்களையும் தனிச்சிறப்பையும் உணர்ந்து கொள்வது எளிதன்று.

இம்மதத்தின் சில விதிகளை நடுநிலைமையற்ற நோக்கோடு, மேலெழுந்த வாரியாக ஆராய்பவர்கள் அதன் பெருமையையோ, அதில் பொதிந்துள்ள உயர்ந்த தத்துவங்களையோ உணர்ந்து கொள்ளச் சிறிதும் முயலாது அவைகள் முட்டாள்தனமானவைகள் என்று அவசரப்பட்டுக் குறைகூறி விடுகிறார்கள். ஜைன சமயத்தின் மகத்தான தத்துவங்களை உணர்ந்து மதிப்பிடுவதற்குக் களங்கமற்ற உள்ளமும், பட்சபாதமற்ற ஆராய்ச்சியும் இன்றியமையாதவை.

இந்தச் சமயத்தின் அடிப்படையான தத்துவங்களில் முக்கியமானவை சில வருமாறு :—துறவு, உள்ளத் தூய்மை, ஒழுக்கத் தூய்மை, தன்னலமின்மை, பிறர்நலம் கருதுதல், கடுங்கோபம் மூட்டப்பட்ட காலத்தும் மன்னித்தல், துன்பம் வந்துற்ற காலை பொறுமையோடும் களிப்போடும் சகித்தல், எல்லா உயிரினங்களிடத்தும் அன்பு பாராட்டுதல், பரிபூரண நேர்மையாகிய இவையே. ஆகவே, இச்சமயம் மெய்ப்பொருளின் நுட்பத்தை விளக்குகிறது. வீண் நம்பிக்கைகளையும், ஆடம்பர மொழிகளையும் கொண்டு அது நம்மை ஏமாற்றுவதில்லை. மதசம்பந்தமான விஷயங்களில் அனுபவத்தைக் கொண்டு மெய்ப்பிப்பது என்பது இயலாத காரியம். சில போதனைகள் நம் அறிவிற்கு அப்பாற்பட்டவைகளாக இருக்கலாம். அதில் கூறப்பட்டுள்ள சில முறைகள் நம்மால் கையாள முடியாதவையாகவும் இருக்கலாம். ஆகவே, நாம் அதைக் குறைவாக எண்ணுவது நியாயமன்று. நுண்பொருளுக்கு அதிசயிக்கத் தக்க ஆற்றல் உண்டு. இந்தச் சமயத்தில் கூறப்பட்டுள்ள அளவுகடந்த ஆன்ம சக்தியை அது வலியுறுத்துகிறது. ஆன்மாவின் ஆற்றலை உணர்ந்து கொள்வதற்கு வேண்டும் கடுமையான தன்னொழுக்கம் சாதாரண மக்களில், ஆணிடத்திலோ பெண்ணிடத்திலோ காண்பது அரிதுதான். ஆனால், அது காரணமாக அந்த மதக் கொள்கைகள் நடைமுறைக்கு ஒத்தவல்ல; இயலாதன என்று நாம் ஒதுக்கிவிடலாகாது. பெருமுயற்சியின்றிப் பெருநலன்களை அடையமுடியாது. தளர்ச்சி யில்லாமலும், இடைவிடாமலும் உழைத்து வந்தால் மட்டுந்தான் பெரிய இலட்சியங்கள் பெறலாம். அதற்கு நெடுங் காலம் பிடிக்கலாம். இந்த இலட்சியத்தை அடைவதற்குப் பெரு முயற்சி மிக அவஸ்யம். ஆனால் நாம் கோரும் அரிய இலட்சியத்திற்கு இடைவிடாத பெரு முயற்சி வீணாகாது.

என்றும் அழியாத ஜைனநூல்களை ஆக்கிய பண்டைக்கால ஜைனப் பேராசிரியர்கள் அறவே தந்நல மற்றவர்களா யிருந் தனர். மக்கள் இனம் உண்மையிலேயே இன்ப வாழ்வு அடைய வேண்டும் என்பதன் பொருட்டு உழைப்பதே தம் கடமையாகக் கொண்டு இருந்தனர். அவர்கள் மகா கல்விமான்கள்: நுண் பொருள் உணரத் தக்கவர்கள்; உலகத்தில் போதிக்கப்பட்டவை அனைத்திலும் மிகச்சிறந்த உண்மைகளைப் போதிக்கத் தக்க பேராற்றல் பெரிதும் வாய்ந்தவர்கள்; அவர்கள் சிறந்த ஆராய்ச்சியாளர்க்ள். அவர்களின் பரேறிவும் நுண்ணறிவும் புகழ் வாய்ந்தவை. தற்கால நூலாசிரியர்களுக்கும் அவர்களுக் கும் பல துறைகளில் பெரிதும்வேற் றுமை யுண்டு. அவர்கள், தம் குறைபாடுகளைத் தாமே மிகவும் கடுமையாகக் கண்டித்துக் கொண்டார்கள். தாம் நூல்களை ஆக்கும் காலத்தில் மிகவும் எச்சரிக்கையோடு அவர்கள் ஆக்கினார்கள். ஏனென்றால், உண்மை யிலிருந்து ஒரு சிறிதளவும் தம்மையும் அறியாது அவர்கள் பிறழ்ந்தபோதிலும், மக்கள் இனத்தையே தவறான நெறியில் புகுத்திய குற்றம் அவர்களைச் சாரும். உண்மை தான் அவர் களுடைய இலட்சியம். உண்மையை நாடுவது அவர்களுடைய வாழ்க்கைப் பணி. அவர்களால் உரைக்கப்பட்ட கருத்துக் களைத் தீர ஆராயாமல் குறை கூறுவது தகுதியன்று. பக்தி யோடும், கவனத்தோடும், புத்திசாலித் தனத்தோடும், நடு நிலைமையோடும் ஆராய்ச்சி செய்தால்மட்டுந்தான் அந்த உண்மை களின் முழுச் சிறப்பையும் நன்கு உணர்ந்து கொள்ளக் கூடும்.

ஒரு காரியத்தைச் செய்து முடிக்க எந்த முறையையும் பின் பற்றலா மென்பது ஜைனசமயக் கொள்கையன்று. தீமையி னின்றும் நன்மை பிறவாது. இன்பத்திற்குக் கொடுமை அடிகோ லாது. "நாம் விரும்புவனவும் அவைகளை அடையும் உபாயங் களும்" [Ends and Means] என்னும் புத்தகத்தை எழுதிய திரு. ஆல்டஸ் ஹக்ஸ்லி [Mr.Aldous Huxley] இந்த நூலில் இந்தக் கொள்கைளில் சிலவற்றை வலியுறுத்தியிருக்கிறார்.

"கொடுமையிலிருந்து உண்மை முன்னேற்றத்திற்கு வழி பிறவாது. நன்மை பிறக்கு மானல் அதற்கு முன் தோன்றிய கொடுமை காரண மாகாது. ஆனல், தீங்கிற்குப் பின்உண் டான நடுநிலைமையும் கருணைச் செயல்களுமே நலனை நாட்டக் கூடியவை. அப்போது ஈடுசெய்யும் நடத்தையின் காரணமாகத்தான் முன்னேற்றத்திற்கு வழியேற்படுகிறதே ஒழிய, அவர்கள் ஈடுசெய்வதற்கு மூலமாக இருந்த கொடுமைகள் நலனுக்கு ஒருபோதும் காரணமல்ல. தக்க முறைகளைக் கையாளுவதனுல் மட்டுந்தான் நல்ல பலன்கள்

விளையும். எந்த முறையைப் பின்பற்றியும் ஒரு காரியத்தைச் சாதித்துக் கொள்வது என்பது தவறான கொள்கை. ஏன் என்றால், இதற்குக் காரணம் வெளிப்படை. எந்த முறையை நாம் கையாளுகிறோமோ அந்த தன்மையைக் கொண்ட பலன்தான் கிடைக்கும்"

இந்த உண்மைகளை நெடுநாட்களுக்கு முன்னமே ஜைனர்கள் உணர்ந்திருந்தார்கள். ஆகவேதான் அவர்கள் தங்கள் போதனைகளிளெல்லாம் அஹிம்சைக் கொள்கையையே மிகவும் முக்கியமானதாக வற்புறுத்தி யிருக்கிறார்கள். அவர்கள் சகிப்புத் தன்மையையே பழகிவந்தார்கள். இந்த அளவிற்கு வேறெந்த மதத்தவர்களும் பழகியதில்லை. ஜைனசமயத் துறவுக் கொள்கையை ஹக்ஸ்லியும்கூட வலியுறுத்துகிறார்:

"எல்லாவற்றையும் துறந்தவன்தான் உத்தம மனிதன். மனித உணர்ச்சியையும், காமத்தையும் வென்றவனை, ஆதிக்க ஆசையோ, மனப்பற்றோ அணுகா. பலவகையான ஆசைப்பொருள்களில் அவனது சிந்தை செல்லாது. கோபமும் வெறுப்பும் நீத்தவனிடம், தனிப்பட்ட ஆசை எதுவும் கிடையாது. சொத்து, புகழ், சமுதாய நிலை அவனுக்குப் பொருட்டல்ல. விஞ்ஞானம், கலை, விசாரணை, சமூகத் தொண்டு ஆகியவற்றிலும் அவன் அக்கரை கொள்வதில்லை. எப்படிப்பட்டவற்றிலும் பற்றில்லாதவன் தான் அதி உன்னதை நிலையை அடைந்தவன்."

ஆனால், இதற்கு மாறுபட்ட துறையிலே உலகம் சென்று கொண்டிருக்கிறது என்பது மறுக்க முடியாததோர் உண்மை. பலாத்காரம், கொடுமை, புரட்சி முறைகள், கோப உணர்ச்சிகளைத் தூண்டிவிடுதல், பொறாமை, கோபம், ஆகியவற்றைக் கொண்டு உலகத்தில் அமைதியையும் இன்பத்தையும் நிலை நாட்டி விடலாமென்று முட்டாள்தனமாகக் கருதுகிறார்கள். அவர்கள் நினைப்பதைப்போல் குறுக்கு வழியைக் கொண்டு எளிதாகவும் விரைவாகவும் உண்மையான இன்பத்தை அடைய முடியாது. நமது துன்பத்திற்குக் காரணங்களாக இருந்தார்கள் என்று பிறரை நாம் தவறாகக் கருதி, அவர்களை நாம் கொடுமையாக நடத்துவதன் மூலம், நமக்கேற்பட்ட கஷ்டங்களையும் துன்பங்களையும் நீக்கிக் கொள்ளலாமென்று நினைப்பது, தற்கால மக்கள் செய்யும் அறிவிற்குப் பொருத்தமல்லாத குற்றங்களில் மிகவும் கடுமையானது. இந்த வேலை எவ்வளவு கஷ்டமான தென்பதை மக்கள் பொதுவாக உணர்வதில்லை. கீழ்க்கண்ட

கேள்வியை மிஸ்டர் ஹக்ஸ்லி கேட்கின்றார்; அது பொருத்த மானதே.

"அடிப்படையிலேயே நியாய மற்ற தொரு முறையைக் கொண்டு நியாயத்துறையில் முன்னேற முடியுமா? நமது சொந்த அனுபவத்தைக் கொண்டு பட்சபாதமற்ற முறையில் நாம் ஆலோசித்தாலும், சரித்திரச் சான்றுகளைக்கொண்டு பார்த்தாலும் அது முடியாது என்னும் முடிவுக்குத்தான் வருவோம். குறுக்கு வழியைக்கொண்டு நாம் பேரின்பவாழ்வை அடைந்து விடலாம் என்னும் கொள்கையில் நாம் பெரிதும் ஆசை கொள்கிறோம். நம்மைப் போலவே நினைக்கிறவர்களுடைய கருத்துப்படியே நம் நினைவும் செல்லுகிறதே யொழிய, பட்ச பாதமற்ற முறையில் ஆராய்ச்சி செய்வதற்குரிய ஆற்றல் நமக்கு அதனால் இருப்பதில்லை."

உலக பொருளாதார முன்னேற்றத்தைக் கொண்டே மக்கள் இனம் இன்பமடைய முடியும் என்னும் தவறான நெறியையே உலகம் பின்பற்றிக்கொண்டிருக்கிறது. உலக மாயுத்தத்தின் கொடுமைகள் நம் எண்ணங்கள் நம்கோரிக்கைகள் பயனற்றன என்பதை மெய்ப்பித்துவிட்டன. உண்மையான நித்தியானந்தம் ஏற்பட வேண்டுமானால், மக்களின் தீய தன்மைகள் அடியோடு விடுபடவேண்டும் இவற்றிற்குப் பொறுமையோடும் இடைவிடாதும் உழைக்க வேண்டும் என்று உறுதியாகச் சொல்லுவேன். இஃது அவசியமான ஆரம்ப நிபந்தனை. இதுவன்றி உலகமக்கள் இன்பத்துடன் உயிர்வாழ முடியாது. ஆனால், துன்பமும் துயரமும் நாசமுமே அதனால் ஏற்படும்.

தொழில் நுட்பத்துறை விரைவில் முன்னேறிக்கொண்டிருக்கிறது. ஆனால், நேர்மை முன்னேற்ற மின்றித் தொழில் நுட்பத்துறை முன்னேற்றம் பயனற்றது. அது பெருங்கேடு விளைவிக்க வல்லது. தொழில் நுட்பத்துறை முன்னேற்றம் நாம் பிற்போக்கான வழியில் போவதற்கு ஏற்றதொரு சாதனமாக விளங்குகிறது. இந்த உண்மையை நாம் உணர்ந்துகொள்ள வில்லை. பொருளாதாரத் திட்டங்களை வகுப்பதிலும், விஞ்ஞான முன்னேற்றத்திலுமே எல்லா நாடுகளும் தம் கவனத்தையும் முயற்சியையும் செலுத்திக்கொண்டிருக்கின்றன. அதை விட, முக்கியமானது மக்களின் தன்மையை முன்னேறச் செய்வதே. அஃது அலட்சியம் செய்யப்படுகிறது.

பண்டைக் காலத்தில் பேரிடம் பெற்றிருந்த பாரமார்த்திகத் துறை இப்போது மிகவும் அற்பமானதொரு நிலையை அடைந்து

விட்டது. அதைப்பற்றிச் சிந்திக்கிறவர்களும் பகற்கனவு காண்கிறவர்களாகக் கருதப்படுகிறார்கள். இந்த ஒரு சிலருக்குள்ளும் பலர் உண்மையற்றவர்கள். அவர்களுக்கு உறுதியான கொள்கை கிடையாது. ஓரம் பேசும் தன்மையும், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் குணமும் தற்கால மக்களிடையே யுள்ள மாபெருங் குறைபாடுகள.

தற்காலத்திய பிரச்னைகள் எல்லாவற்றிலும் பெரியதும், திகைக்கச் செய்ய வல்லதும் ஆனது, மனித இயல்பை முன்னேறச் செய்யும் பிரச்னையே என ஜைன ஆசிரியர்கள் முன் உணர்ந்திருக்கிறார்கள். இது மிக நுட்பமானதொன்று. தனிப்பட்டவர்களின் உரிமை என்னும் முக்கியமான கொள்கை பற்றியது. இது மிகவும் சிக்கலான பிரச்னையும் ஆம். இதுபற்றி அபிப்பிராயபேதம் இருந்தே தீரும். இது விஷயத்தில் முழு ஒற்றுமை ஒருகாலும் எதிர்பார்க்க முடியாது.

இந்தப் பிரச்னையின் பலவகைத் துறைகள் பற்றிய கருத்துக்களும் மிக மிக மாறுபட்டுத் திகைக்கச் செய்யக் கூடியவை. ஆகவே, இந்தப் பிரச்னையைக் கையாளுவதில் உண்மையிலேயே வெல்ல முடியாத பல அல்லல்கள் ஏற்படும். மேலும், அது மிகவும் நிதானமாக நடக்கக் கூடிய நிகழ்ச்சியுமாம்.

மனித இயல்பு கட்டுக்கடங்காதது. இயந்திரங்களைப்போல அடக்க முடையதன்று. ஆகவே இந்தத் துறையில் பொறுமையும் இடைவிடாத முயற்சியும் அவசியம். மிகச் சிறந்த முறையில் முயன்ற போதிலுங்கூட முன்னேற்றம் மிகவும் அற்பமாகத்தானிருக்கும். இதைக் கட்டுப்படுத்த வல்லவை பலவுண்டு: மிகச் சிறந்த கொள்கைகளிற் சில, சராசரி மனிதன் ஆற்றலுக்கு அப்பாற்பட்டவை, பாரமார்த்திக தெய்வீகத் தன்மையில் மிகச் சிறந்து, மிக உயர்ந்தவர் மட்டுந்தான் அந்த நோக்கங்களைப் பூரணமாக்கலாம். இத்தனை தொல்லைகளிருந்த போதிலும் கலவரங்களையும் மனத் தாங்கல்களையும் சண்டை சச்சரவுகளையும் உலகத்திலிருந்து அகற்றி, அங்கே இன்பம் பொங்கி ஒளிவீசத் தக்கவாறு முயல வேண்டும். ஆனால், எதிரான கட்டுப்பாடுகள் உண்டு என்பதை நாம் மறந்துவிடலாகாது. அந்தக் கட்டுப்பாடுகள் நாம் தவறான முடிவுகளைச் செய்யாதபடியும், அவசரப்பட்டு எல்லையில்லாத அளவுக்கு நம்பிக்கை கொள்ளாதபடியும் நம்மைத் தடுக்க வல்லன. மிகச் சிறந்த போதனைகள் சிலவற்றைப் பற்றி இப்போது கவனிப்போம். அவை உலகிலுள்ள பெரிய அம்சங்கள் எல்லாவற்றிற்கும் பொதுவானவை.

"உங்களுக்குப் பிறர் இழைக்கும் தீமையை எதிர்த்துப் போராடாதீர்கள். உங்கள் எதிரிகளிடம் அன்பு கொள்ளுங்கள். உங்களைச் சபிப்பவர்களை ஆசீர்வதியுங்கள். உங்களை வெறுப்ப வர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை அவமரியாதையாக நடத்துகிறவர்களுக்காகவும், உங்கள்மீது தொடர்ந்து குற்றம் சாட்டுகிறவர்களுக்காகவும் இறைவனிடம் மன்றாடுங்கள்"

மற்றச் சில போதனைகள் காரண காரியங்கள் என்னும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டவை. நேர்மையை நாடி, அதைப் பழக ஆசை கொள்ளுகிறவர்கள் பாக்கியவான் களே. ஏனென்றால் அவர்கள் உள்ளம் திருப்தி அடையும். இரக்கமுள்ளவர்கள் பாக்கிய வான்கள். ஏனென்றால், அவர்கள் இரங்கப் பெறுவார்கள். உள்ளத் தூய்மை உடையவர்கள் பாக்கியவான்கள். ஏனென்றால் அவர்கள் இறைவனைக் காண்பார்கள். நன்மை செய்தவன் பொருட்டுத் துன்பத்திற்கு உள்ளா கிறவர்கள் பாக்கியவான்கள். ஏன் என்றால், இறைவனது சாம்ராஜ்யம் அவர்களுக்கு உரியது. இந்த மொழிகள் இயேசு கிருஸ்துவினுடையனவாக விருக்கலாம். ஆனால், அந்தப் போதனைகள் அவருக்கு வெகுகாலத்துக்கு முன்னமேயே தீர்த் தங்கரர்களால் போதிக்கப்பட்டவை.

உங்களுக்குப் பிறர் நீங்கள் எதைச் செய்யவேண்டும் என்று விரும்புகிறீர்களோ அதையே நீங்களும் பிறருக்குச் செய்யுங்கள் என்னும் தலைசிறந்த விதியினைக் கடைப்பிடியுங்கள்; அப்போது சமூகம் இன்பம் பெறும். ஆனால், தற்காலத்தில் நாம் உண்மையி லேயே அந்தக் கொள்கையில் நம்பிக்கை கொண்டிருக்கிறோமா என்பது சந்தேகமாயிருக்கிறது. நாடுகளும், தனிப்பட்டவர் களும், உலகத்தில் பிறரோடு பழகும்போது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு நடந்து கொள்ளுகிறார்களே யொழிய நீதி, தயை அன்பு என்னும் கொள்கையை அடிப்படையாகக் கொள்ளுவ தில்லை.

நமது உள்ளமும் செயலும் ஒன்றற்கொன்று அடியோடு மாறுபட்டிருக்கின்றன என்பது மறுக்க முடியாததோர் உண்மை. நம் குறை பாடுகளை நாம் அடியோடு அலட்சியப் படுத்துகின் றோம். இந்த உலகத்தை ஓர் இன்ப நிலையமாக ஆக்கிவிடக் கூடும் என்று பகற்கனவு காண்கின்றோம். இதற்கு ஆதார மாகத் தர்க்கமாடவும் செய்கின்றோம். நாம் உலகத்தாரை இவ் வாறாக ஏமாற்றிக் கொண்டிருக்கின்றோம் என்பதை நாம் உணர்வ தில்லை. இது நாம் வேண்டுமென்றே செய்வது. மனி

தனுக்குள்ள இயற்கையான பலக்குறைவு திடமின்மை காரணமாக இப்படிப் பட்டதென்று நாம் கூறுவதற் கில்லை.

கொள்கையை ஒட்டி நடப்பது அரிது என்பது ஒப்புக்கொள்ளவேண்டுவ தொன்ரும். எண்ணம் நாடுகிறது; மனம் பலவீனமாயிருக்கிறது அதைச் செய்ய. உண்மையிலேயே தம் இலட்சியப்படி வாழ்வது இடையருது உழைப்பவர்களுக்குத் தான் பொருந்தும். அப்படி முயற்சித்தும் அவர்களுக்குக் கைகூடவில்லையாளுல், அதற்குக் காரணம் அவர்களுடைய திடமின்மையும், மாறுபட்ட சுற்றுச் சார்புகளிலுள்ள வெல்ல முடியாத தடைகளுமே.

பல சீர் திருத்தக்காரர்களும், மதாச்சாரியர்களும் தம் ஆயுள் கால மெல்லாம் உழைத்திருந்துங் கூட மனிதன் பூரணத்துவம் அடைவது எட்டாக் கனியாகவே தோன்றுகிறது. ஆசைகள், வெறுப்பு, தீமை ஆகியவை நம்முள் வெல்லப்பட வில்லை. அவ்வப்போது அவை நம்மிடமிருந்து பெரு வேகத்தோடு கிளம்பிப் பொலிகின்றன. நாம் அவற்றிற்கு அடிமைகளாகவே தோற்று கிறோம்.

"உன்னையே வெல்!" என்னும் இலட்சியம் இதுவரையில் இருந்து வந்தது போலவே அடைய வொண்ணுததாக இருக்கிறது. ஆராய்ச்சியாளர்கள் நம் நிலைமையைப்பற்றி அதிருப்தி கொள்ளுகிறுர்கள். அன்றியும் நம் கொள்கைகள், நம் முடிபுகள், தற்காலப் போக்குக்கள் ஆகியவைபற்றியும் அதிருப்தி கொள்ளுகிறுர்கள். நாம் இலௌகிகத்திலேயே மூழ்கிக் கிடக்கின்றோம்.

தற்காலத்தவர்களுள் பெரும்பான்மையானவர்களுக்குப் பண்டைய இலட்சியங்கள் ஒரு சிறிதும் கவர்ச்சி தருவனவாக இல்லை. தொன்று தொட்டுவந்த பாரமார்த்தங்கள் உலகை விட்டேகி அற்றுவிட்டனபோலத் தோன்றுகின்றன. இந்தத் துறையில் மாற்றம் வெகுவிரைவில் ஏற்பட்டிருக்கிறது, நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் சந்தர்ப்பத்தை ஒட்டித்தான் செய்கிரோமே ஒழியக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு நாம் எதையும் முடிவுகட்டுவதில்லை.

ஒன்றற்கும் உதவாதவற்றிற்காக நாம் அரும்பாடுபட்டு, நாம் அடைதற்குரிய ஆன்மாவின் முன்னேற்றத்தை அடியோடு மறந்துவிடுகிறோம். எனவே, நம்மை நாமே இழந்தவர்களாகின்றோம்.

உள்ளுணர்வு பெருகினலொழிய நாம் இன்பம் அடைய முடியாது. வீண் நம்பிக்கைகளைக் கொண்டு நாம் நம்மையே ஏமாற்றிக் கொள்வதில் பய னில்லை. உண்மைகளைத் தைரியத் தோடு கடைப்பிடிக்க வேண்டும். அறிவீனத்தை நாம் உண்மையி லேயே அகற்ற வில்லை. நேர்மையான சிந்தனை என்பது இன் னும் கொள்கைகள் யளவிலேதான் இருக்கிறது. குற்றங்கள், பொய்ம்மை, தவருன எண்ணங்கள், விருப்பு வெறுப்புக்கள் ஆகிய வற்றிற்கும் நாம் இன்னும் ஆளாகிக்கொண்டுதான் இருக்கின்ருேம். ஞானமும், விமோசனமும் பெறுவது பகற் கனவாகத்தான் இருக்கிறது.

மக்களுக்கு ஆன்மாவிலிருந்த நம்பிக்கை மிக விரைவாகக் குறைந்து கொண்டு வருகிறது. இலெளகீகத் துறையுலேயே உலகம் பெருகிக் கொண்டு வருகிறது. இது விரும்பத்தக்க மாறு தல் அன்று. இவ்வாறு கீழ்நோக்கி நாம் சென்றுகொண்டிருப் போமே யாஞல் நாம் எங்குக் கொண்டுபோய் விடப்படுவோம் என்பது யாராலும் சொல்லமுடியாது.

உடல் நசித்தபோதும் ஆன்மா நசிப்பதில்லை. உயிர் நீத்த பிறகு மறுபிறவி உண்டு என்னும் நம்பிக்கை யில்லாவிடில், தீமையை விலக்கி நன்மையே செய்யவேண்டும் என்பதற்குப் போதிய ஆதாரமில்லை. ஷேக்ஸ்பியர் தம் கவியில் குறிப்பிட்டி ருப்பதுபோல உலகத்தி லுள்ள தராதரங்களுக்கு நாம் உள்ளாகி யிருக்கின்ருேம்.

சுத்தநிலையைக் குறிக்கும் போதனைகள் நம் மனத்தைக் கவ ருவதில்லை. ஆனல், வெறுக்கப்படுகின்றன. தற்கால உலகில் அந்தப் பூரணத்துவத்தை அடையத்தக்க இலட்சியங்களில் சில முடியாதவை என்பதை நாம் ஒப்புக்கொள்ளுகிருேம். ஆனல், ஒரு விஷயம்: அஃதாவது, தக்க எதுவும் கைவரப் பெறவேண்டு மானல், பெருமுயற்சி செய்துதான் பெறவேண்டும்.

இந்தக் கஷ்டங்களை, அஃதாவது சராசரி மனிதன் அல்லது பெண்ணின் பலவீனம், மனித இயற்கையும் திறமையும் பெரி தும் மாறுபட்டவை என்னும் உண்மைகளை ஜைனசமயம் ஒப்புக் கொள்ளுகிறது. ஆகவே, இயலாத தொன்றைச் செய்து முடிக் கும்படி அது கோருவதில்லை. அவரவர் ஆற்றலுக்கேற்றவாறு மிகச்சிறந்த முறையில் அவர்கள் ஒழுகவேண்டும் என்றுதான் எதிர்பார்க்கிறது. அநேகவிதத் தடைகளும் கஷ்டங்களும் உண்டு என்பதை ஜைனசமயம் நிராகரிக்கவில்லை. பலவீனமோ அறியா மையோ ஒரு சமாதானமாகாது.

மகாகொடியவர்கள் தத்தம் செயல்களுக்கு ஏற்ற பலன் களிலிருந்து தப்பமுடியாது என்ருலும், அவர்களும் தக்க முயற்சி செய்தால் சித்திஎய்தலாம் என்பதில் சந்தேகமில்லை. என்றென்றும் ஒருவன் கடைசிப்படி (கீழ்தரத்தில்) யிலேயே இருக்க வேண்டும் என்பதை ஜைனசமயம் ஒப்புக்கொள்வ தில்லை.

ஒரு ஜன்மத்திலேயே உயிர்முடிவடைவ தில்லை. எதிர்கா லம் முழுதும், அந்த உயிர்க்கு, உரித்தானதே. முன்பு செய்த நல்வினை தீவினைகளைக் கொண்டு எதிர்காலத்திற்கு இடமே அடி யோடு கிடையாது என்றும் சொல்லிவிடுவதற்கு இல்லை. உண் மையிலேயே அது முன்னேற்றத்திற்கு ஒரு தடையாகத்தான் இருக்கிறது.

ஆனல், மனிதன் தன் முயற்சியினல் வினைப்பயனை— விதியை—வெல்லலாம். மனித முயற்சிக்கும் தலைவிதிக்கும் உள்ள மாறுபாட்டிற்கும், சுயேச்சையுணர்ச்சிக்கும், தலையெ ழுத்துக்கு முள்ள வேறுபாட்டிற்கும் உள்ள பாஸ்பர விரோ தம் சரியான முறையில் இச்சமயத்தில் பொருத்துவிக்கப்படு கிறது.

மிகவுக்கிரமான ஒருதலைக்கொள்கைகள் நிராகரிக்கப் படு கின்றன; நேர்மையான முறைகளைக்கொண்டோ, இடையருத முயற்சியாலோ அவற்றிலிருந்து தன்னை மீட்டுக்கொள்ள எவ் வகை வாய்ப்பும் இல்லாதபோது, துன்பத்துக் குள்ளானவன் பொறுமையோடு எல்லாக் கஷ்டங்களையும் சகிக்கவேண்டும் என்று கூறப்படுகிறது. ஆனல் தற்காலத்தில் சாத்வீக எதிர்ப்புப் பயனற்றது என்றும், தீமையோடு போராட வேண்டும் என்றும் சொல்லப்படுகின்றன. பொறுமையோடு கஷ்டத்தைச் சகிக்கக் கூடிய உயரிய பண்பு தற்காலத்தவருடைய மனத்திற்குப் பிடி ப்பதில்லை. இந்[illegible]னையைப் பெரும்பாலும் தவறுதலாக அர்த்தம் செய்கின்றார்களே ஒழிய இதன் உண்மையை உணர்ந் தார்களில்லை.

"[illegible]பாகவும் திருப்தியோடும் இருப்பவனைக்கண்டால் யான் அருவருக்கின்றேன், ஏனென்றால் அப்படிப்பட்ட திருப்தி அவனுடைய இழிவான தன்மையாகும். அத்தன்மை அவனது தொழில், முயற்சி, சுதந்திர வேட்கை ஆகியவற்றின் விரோதி என்பது உண்மை!" என்று கார்லைல் கூறுகிறார்.

இங்கே அடிப்படையான உண்மை தெரிந்து கொள்ளப் படவில்லை. இவர் மற்றொரு நோக்கை மறந்து விடுகிறார், சிலர்

113415

தொழிலிலும் முயற்சியிலும் ஈடு பட்டிருந்துங்கூட, எளிய துன்பமான வாழ்க்கையை அனுபவிக்க வேண்டுபவராகிறார்கள் என்பது நாம் மறுக்க முடியாதது. அப்போது அவர்கள் தங்கள் துன்பங்களுக்குக் காரணர்களாக யாரைக் கருதுகிறார்களோ அவர்கள் மீது அவர்கள் விரோதம் கொள்வது நல்லதா? பொறுமையோடு தங்கள் தொல்லைகளை யெல்லாம் சகித்துக் கொள்வது நல்லதா? பிந்திய முறையை மேற் கொள்ளும்படி ஜைனமும் உலகத்திலுள்ள மகத்தான சமயங்களும் கூறுகின்றன.

நம் துன்பங்களுக் கெல்லாம் காரணர் என்று யாரை நாம் தவறாகக் கருது கின்றோமோ அவர்களெல்லாம் கருவிகளே யொழிய அவற்றிற்கு முழுப் பொறுப்பாளியாக மாட்டார்கள். ஆனபோதிலும் அவர்களைப் பற்றினவரையில் பிறரைத்துன்புறுத்தும் குற்றத்திலிருந்து மீள முடியாது. செயலின் இரட்டைத் தன்மை அநேகருக்கு புலப்படுவதில்லை. இது இருவருக்கும் தீங்கை இழைக்க வல்ல தென்பதைத் தெளிவாய் உணரவேண்டும். இவ்வுண்மையை உணராதவர்கள் துன்பங்களிலிருந்து விடுபட முடியாது. பின்னும் பல மடங்கு அவற்றைப் பெருக்கிக் கொள்ளுகிறார்கள்.

எல்லாவித முயற்சிகளையும் செய்துகூட ஒரு மனிதன் தொல்லைகளுக்கு உள்ளாகிக்கொண்டு துன்புறுவானேயானால், அவனுடைய தலை விதிதான் அதற்குக்காரணம் அத்தலைவிதி அவனுக்குப் புறம்பானதன்று. இது மக்களை வாட்டி வருத்துவதில் மகிழ்ச்சி கொள்ளுகிற ஒரு அன்னிய ஆற்றல் அன்று, பூர்வ கர்மத்தின் பலனைத்தான் தலைவிதி அமைகிறது என்று ஜைனம் கூறுகிறது. இந்த உண்மை ஒப்புக்கொள்ளப்பட்டால் ஒருவன் கஷ்டத்திற்கு அவனே பொறுப்பாளி ஆகிறான். ஏனென்றால் இந்தக் கொள்கைப்படி தனக்குத் தன் வாழ்க்கையில் நேரும் நன்மை தீமைகளுக்கு அவனே காரணன் ஆகிறான்.

ஜைனக் கொள்கைப்படி தொன்று தொட்டு ஜீவன்கள் அசுத்தமான நிலையிலே இருக்கின்றன என்பதுதான் சித்தாந்தம். அவை புனிதமடைவது அவற்றின் ஆதிக்கத்தில் தான் இருக்கின்றது. புனிதம் அடையும் வரையில் அவை பிறந்து இறந்து மாறிக்கொண்டே இருக்க வேண்டியது இயல்பு.

ஜீவன்கள் தாமாகவே அமைந்தவை; அழிவில்லாதவை; அசுத்தமான சூழ் நிலையில் உள்ளவை. தம்மைப் புனிதப்படுத்திக் கொள்ளும் ஆற்றல் அவற்றிற்கு உண்டு என்பவையே ஜைனசமய கொள்கைகள். புனிதம் அடைந்த ஜீவன்கள் மீண்டும் கறைபடுவ

தில்லை. மனிதன் தொல்லைகளுக்கு உள்ளாவதற்கு யார் காரணர்களோ அவர்கள் கருவியாகத் தானிருக்கின்றார்கள். எனினும் அவர்கள் தமது தீய இயல்பினால் தூண்டப் பெற்றுத் தாமாகவே பிறர்க்குத் துன்பங்களை இழைக்கிறார்கள். இதனால் தொல்லைக்குள்ளாகிற ஒருவனுக்கு எந்த விதத்திலும் பாதகமில்லை. அவன் எதையும் இழப்பதுமில்லை. ஆனால், ஒரு விதத்தில் இலாபம் அடைகிறான். இந்த நிலைமையில் அவன் தொல்லைகள் முடிவடைகின்றன. மேலும் தமக்குத் தீமை செய்கிறவர்கள் மீது அவன் வெறுப்புக் கொள்ளுவானானால், மேலும் தொல்லைகள் வந்து அணுக அவனுக்கு இடமே ஏற்படுகிறது. பின் கூறிய முறைப்படி அவனுக்கு நன்மை ஏற்படாமல் போனாலும் தீமை கண்டிப்பாக ஏற்படுகிறது.

முற் கூறிய விவாதத்திலிருந்து ஒரு விஷயம் தெளிவாகிறது. இந்த உன்னதமான, சிறந்த, உயரிய நிலைமை துன்பத்தை நீக்க வல்ல முயற்சியை நிராகரிப்பதில்லை. நேர்மையான குற்றமற்ற முயற்சிகள் பலிக்காத போதுதான் இந்தமுறை கையாளப்படுகிறது. மற்ற முறையை ஜைனம் ஏற்றுக்கொள்வதில்லை. அதாவது காரியம் கைகூடுவதற்கு எந்த முறையை வேண்டுமானாலும் பின்பற்றலாம் என்னும் நவீனக்கொள்கை அனுமதிக்கத்தக்தன்று. ஒருவன் தொல்லைக்குள்ளாகியிருக்கிறான். அதினின்று நீங்கும் பொருட்டுத் தனக்குத் தொல்லை விளைப்பவனைக் கொலை செய்வது அறியாமை. ஏனென்றால் அந்தத் தீய செயல் காரணமாக; மேலும் தொல்லைகள் வந்து தன்னை அணுகும்படி வழி செய்து கொள்ளுகிறான். கண்டு பிடிக்கப்பட்டால், அவன் உடனே தண்டனைக்கு உள்ளாகிறான். அப்படி யில்லாத போதிலும், ஒரு காலத்தில் இச்செயலின் பலா பலனைத் தான் அனுபவித்துத்தான் தீர வேண்டும். ஆகவே, ஜைனக் கொள்கையின்படி சமதர்மத்தின் (பொது வுடைமைத் திட்டத்தின்) புரட்சி முறைகள் நியாயமானவை யல்ல.

ஆனாலும், கொடியவர்களையும் கொடுமையையும் ஜைனம் தீவிரமாகக் கண்டிக்கிறது. கடவுள் கருவிதான் என்று கொடியவர்கள் சொல்லித் தம் செயல்கள் நியாயமானவை யென்று இந்த உலகத்திலுள்ளவர்கள் கூறிக்கொள்ள வேண்டுவதில்லை. கடவுள் தம்மூலமாகவே பிறரைத் தண்டிக்கின்றார் என்றும் அவர்கள் தம்மை ஏமாற்றிக்கொள்ள வேண்டுவதில்லை. அவர்கள் பிறரைத் துன்புறுத்துகிறார்கள். பிறர் அடையும் துன்பத்தில் இவர்கள் இன்பம் காண்கிறார்கள். அவர்களுடைய தீய இயல்பும் பிறர்க்கு உள்ள உணர்ச்சிகளைப் பொருட்படுத்தாததும் தான் இதற்குக்

காரணமேயொழிய, நீதியும் அமைதியும் ஏகோபித்த தன்மையும் நாட்டில் நிலவ வேண்டும் என்னும் பேருணர்ச்சி காரணமாக அன்று.

சிறந்தோர்களையும் குற்ற மற்றவர்களையும் தொல்லைகளுக்கு உள்ளாக்கும் பொருட்டு, இழிவான முறைகளைக் கையாளும் இவர்கள் கொஞ்ச காலம் செழிப்பதாகத் தோன்றலாம். ஆனால் அவர்கள் தம் தீமைச் செயல்களின் பலா பலன்களை அனுபவியாமல் தப்ப முடியாது. என்றைக்காவது ஒரு நாள் அவற்றை அனுபவித்தே தீரவேண்டும். தம்மிடம் சிக்கியவர்களைப் பார்த்து 'நீங்கள் செய்த பாவத்தின் பலனைத்தான் அனுபவிக்கிறீர்கள்' என்று சொல்ல அவர்களுக்கு அதிகாரம் கிடையாது. அது உண்மைதான் என்பதில் சந்தேக மில்லை. துன்புறுபவர்கள் மறுபடியும் தொல்லைகளுக்கு உள்ளாகக்கூடாது என்பதற்காகத் தான் இது இவர்களுக்குக் கூறப்பட்டதே ஒழிய, கொடியவர்கள் ஆற்றும் கொடுமை நியாயமானது என்பதற்கன்று. அவர்களுடைய பிற்கால கதி என்ன என்பதை அவர்கள் மறந்து போகாதிருக்கட்டும். இதைத்தான் அழுத்தந் திருத்தமாக கிறிஸ்து கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்:

"ஏற்கெனவே வரையப் பட்டுள்ளபடியே பிதாவின் மகன் போய்க்கொண்டிருக்கிறான். ஆனால் பிதாவின் மகனைக் காட்டிக் கொடுப்பவன் கட்டாயம் துக்கத்திற்கு உள்ளாகியே தீரவேண்டும். அவன் பிறவா திருந்தால் அவனுக்கு அது நன்மையாக இருந்திருக்கும்."

தமக்கு என்ன நேரும் என்பது பற்றிக் கொடுமையாளர்கள் மறந்து விடக்கூடாது. தொல்லைப்படுகிறவன் அத்தொல்லையினின்று தப்ப முடியாது. ஏனென்றால், அவற்றிற்கு அவனே பொறுப்பாளி அவை அவனுடைய பழைய செயலின் காரணமாக அமைந்தவை. இருந்தபோதிலும், அவனுடைய தொல்லைகளுக்குக் காரணமாயிருந்து, அவனுக்குத் தொல்லை விளைப்பவர்கள், தாம் செய்யும் தொல்லைகள் குற்ற மற்றவை என்று கை கழுவி விட முடியாது. அப்படி மீறிச் செய்வார்களானால், தம்மை எதிர்காலத் தொல்லைகளுக்கு உள்ளாக்கிக் கொண்டவர்கள் ஆவார்கள்.

தாம் அனுபவிக்கும் துன்பம் ஒவ்வொன்றுக்கும் ஏற்ற காரணம் உண்டு என்பது தான் ஜைனத்தின் தத்துவம். இதற்கு நமது ஆன்மாவின் பூர்வ சரித்திர முழுவதையும் புரட்டிப் பார்க்க வேண்டும். சில சமயங்களில் நம் செயல்களின் பலன்

கள் நூறுண்டுகளுக்குப் பின்னரும் வந்து அனுகுவது உண்டு. அதற்கு அநேக காரணங்கள் உண்டு. ஆனால் அவை முறைதப்பித் தாறுமாறாக நடப்பதில்லை.

பணக்காரர்களையும் ஆதிக்கமுள்ளவர்களையும் ஜைனம் கடிகிறது. பிறருக்குத் துன்பம் மூட்டும் பொருட்டுத் தமது பதவியை அவர்கள் தீயவழியில் பயன்படுத்தலாகாது. அவர்களுடைய இலட்சியம் நேர்மையாகத்தான் இருக்கவேண்டும். நேர்மையாக இல்லாவிட்டால் அவர்கள் நெடுநாள் இன்பமாக வாழ முடியாது. மனித வாழ்க்கையில் எத்தனையோ எதிர்பாராத சம்பவங்கள் உயர்வும் தாழ்வும் மாறி மாறி வருகின்றன. உயர்ந்தோர் தாழ்கின்றனர்; தாழ்ந்தோர் உயர்கின்றனர். அது தான் உலக இயல்பு. ஆகவே, நாம் ஆதிக்க முடையோர்களாகவும் பணக்காரர்களாகவும் இருக்கிற வரையிலும், பிறருக்கு நன்மை செய்வதிலேயே முனைய வேண்டும். மக்கள் இனத்தின்பால் இவர்களுக்கு அன்பு சுரக்கிறது என்பதை மெய்ப்பிக்கவேண்டும்.

நெடுநாள் ஆதிக்கத்தோடும் செல்வத்தோடும் நாம் இருப்போம் என்பதற்கில்லை. ஆகவே, நம் காலத்தை வீணாக்காமல் நமக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று எச்சரிக்கை செய்யப்படுகிறோம். நம் தீமைகளிலிருந்து நம்மைக் காப்பாற்ற ஜைனம் அரும்பாடு படுகிறது.

ஒரு குடியானவன் தன் மகசூல்களில் ஒரு பகுதியை விதை முதலுக்கு என்று எதிர் காலத்துக்காக எடுத்து வைத்துவிட்டு மிகுதியையே பயன் படுத்திக் கொள்ளுகிறான். அது போலவே அதிர்ஷ்டவசமாகச் செல்வர்களாயிருப்பவர்கள், தம் செல்வத்தில் ஒரு பகுதியை ஒதுக்கி வைத்து, மிகுதியைத்தான் பயன் படுத்திக் கொள்ள வேண்டும். இந்த முறையைக் கைக் கொண்டால்தான் இன்பத்தை நிலை பெற்றதாக ஆக்கிக் கொள்ளலாம். அனுபவத்தைக் கொண்டு நாம் இதைப் பார்ப்போமானால் உலக மக்கள் இவ்வரிய உண்மையை உணர்ந்தவர்களாகத் தெரியவில்லை. பதவி கிடைத்தால் ஒருவன் பெருமை கொள்ளலாகாது; பிறரையும் அவமதிக்கலாகாது. இவை அறியாமையின் சின்னங்கள். நிற்க, உண்மையான அடக்கமே சிறந்த அறிவின் அடையாளமாகும்.

தற்காலத்தவர்களுடைய மற்றொரு முக்கியமான முடிவையும் ஜைனம் எதிர்பார்த்திருக்கிறது. உலக மக்களில் ஒரு சிலர் வசம் அளவு கடந்த பொருள் திரண்டு இருப்பதனால் நேரக் கூடிய தீமைகளை அது நன்கு எதிர்பார்த்திருக்கிறது. ஒருவனுடைய

உடைமை, ஆதிக்கம், செல்வாக்கு ஆகியவற்றை அளவுபடுத்திக் கொள்ள வேண்டும். ஜைன மதத்தின் முக்கியமான * ஐந்து கொள்கைகளில் இதுவுமொன்று.

யாருக்கேனும் அதிர்ஷ்ட வசத்தால் பெருநிதி திரளுமானல் அவர்கள் பிறர்பால் நல்லெண்ணத் தோடும், தர்ம சிந்தனையோடும், தாராளமாக உதவுமாறு தூண்டப்படுவார்கள்.

மக்களின் தொல்லைகளைப் பெருக்கும் பொருட்டு ஆதிக்கத்தையும் பதவியையும் எந்தக்காரணத்தை முன்னிட்டும் பயன்படுத்தலாகாது. உலகமக்களின் பெரும்பாலாருக்கும் நாசத்தையும் திகைப்பையும் உண்டாக்கலாகாது. ஆனல் இழி நிலையிலுள்ளவர்களின் நன்மைகளைக் கருத வேண்டியது அவர்களுடைய கடமை யாகிறது. தருமம் செய்கிறவரும், பெறுகிறவரும் இதனல் நலமடைகின்றனர்கள் என்று ஜைனமதம் வலியுறுத்துகிறது.

"பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை"

என்று திருக்குறளாசிரியரும் வற்புறுத்தி யிருக்கிறர்.

விரையார் மலர்மிசை வருவார் திருவறம் விழைவார்
கொலையினை யிழையார் பொய்
யுரையார் களவினை யொழுகார் பிறர்மனையுவவார்
மிருபொருள் உவவார் வெஞ்
சுரையால் உணர்வினை யழியார் அழிதசை துவ்வார்
விடமென வெவ்வாறும்
புரையார் நறவினை நுகரார் இரவுணல் புகழார்
குரவரை யிகழாரே.

—திருக்கலம்பகம்

ஜைன நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள "போக பூமி" யில் தனிப்பட்டவர்களுக்குச் சொத்து என்பது இல்லை என்பது இங்கே கவனிக்கத்தக்கது. ஆனல் அந்தப் போக பூமியில் தம் தேவைகளை அடையும் பொருட்டு உழைக்க வேண்டுவதில்லை; அவை தாமாகவே கிடைக்கின்றன.

---

* ஜைன மதத்தின் ஐந்து கொள்கைகளாவன:-

1. கொல்லாமை
2. வாய்மை
3. கள்ளாமை
4. பிரம்மசர்யம்
5. பற்றின்மை

இந்த உண்மையை நாம் அலட்சியப் படுத்த முடியாது. உலகில் உழைத்தால் மட்டுந்தான் எதுவும் கிடைக்கும். கிடைப்பதும் ஓர் அளவோடுதான் கிடைக்கின்றது. மனிதனுக்குத் தேவையான விருப்பமான அளவுக்கு அவை கிடைப்பதில்லை. ஆகவே, போட்டிகளும் ஏற்றத்தாழ்வுகளும் இருக்கத்தான் செய்யும்.

எந்த மதமும் என்னதான் நல்லதாக இருந்த போதிலும் கூட நடைமுறைக்கு ஒத்ததாக இல்லாவிட்டால், அதன் ஆடம்பரத்தில் நாம் சொக்கிவிடலாகாது.

எந்த திட்டமும் எந்த முறையில் நடைபெறுகிறதோ, அதை யார் நடத்தி வைக்கின்றார்களோ அவர்களைப் பொருத்தே அஃது அமைகிறது. கொலைபாதகமான போட்டா போட்டி, உலகிலுள்ள நல்ல பொருள்கள் எல்லாவற்றையும் தாமே அடைந்து கொள்ள வேண்டும் என்பதில் குரோத புத்தி, ஒரு சில மக்கள் உலகத்திலுள்ள அனைவரையுமே சூறை யாட வேண்டும் என்ற எண்ணம், பொருளையும் ஆதிக்கத்தையும் தேடிச் சேர்த்துத் தாமே வைத்துக்கொள்ளவேண்டும் என்னும் பேராசை, ஆகிய இவைகள் உலகம் முழுவதிலும் பரவியிருக்கின்றன.

நாடுகளிடையேயுள்ள அதிருப்திக்கு இவையே காரணம். உலகம் முழுவதையுமே நாசப்படுத்திவிடத் தக்க மகா கொடிய யுத்தங்களும் இவற்றாலேயே ஏற்படுகின்றன. இந்த யுத்தங்களுக்கு ஈடான யுத்தம் இதுவரையில் ஏற்பட்டதேயில்லை. ஆகவே ஜைனம் இவற்றை ஒப்புக்கொள்வதில்லை.

பல முக்கியமான அம்சங்களில் பௌத்த மதத்திற்கும் ஜைனத்திற்கும் வேற்றுமைகள் உண்டு. பௌத்தத்தின் இறுதியான இலட்சியம் நிர்வாணம். அது "அழிவுநிலை" எனத்தோன்றுகிறது. சிலசமயங்களில் அது "சூன்யம்" என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் இறுதியான நிலை உண்டு என்பதுதானே ஒழிய அது "சூன்யம்' என்பது அல்ல. இதுதான் ஜைனக்கொள்கை.

அறிவீனமும் தொல்லைகளும், அதனால் அகலுவது மட்டுமன்றி, என்றென்றும் சொல்வதற்கு அரிதான இன்பநிலையையும் முழுதுணரும் ஞானத்தையும் அது நல்குகிறது. இந்த இரண்டு மதங்களுக்கும் உள்ள அடிப்படையான வேற்றுமை இதுதான். இவற்றிற்குள்ள ஒத்த சிலகருத்துகள் குழப்பத்திற்கு இடம் கொடுக்கின்றன. ஆனால் ஊன்றிப் பார்த்தால் அவைகளின் வேறுபாடுகள் விளங்கும்.

அழிவுதான் இலட்சியம் என்று கூறுவது திருப்திகரமா யில்லை. மனித அறிவுக்கு ஒத்ததாகவும் திருப்திகரமானதாகவும் இல்லைஎன்பதுதான் ஜைனத்தின் கொள்கை. இந்தப்போக்கு ஆன்மார்த்த முன்னேற்றம் என்பதை அடியோடு கலகலக்கச் செய்கிறது. அந்தக்கொள்கை ஆன்மார்த்த முயற்சிக்கு ஆக் கம் தரவல்லதன்று. தானாகவே கஷ்டங்களையும் தொல்லைகளை யும் அனுபவித்து அழிய எவனாகிலும் விரும்புவானா?

இந்தப் புத்தக் கொள்கையின்பாற் பட்டதுதான் இடைய றாத மாற்றம். அந்தக் கொள்கைப்படி ஸ்திரநிலைக்கு இடமே இல்லை. ஸ்திரநிலை இல்லையானால் வஸ்துவே இல்லை என்று முடிவு கட்டவேண்டிவரும். ஆகையால்தான் எந்தக் கொள்கை யிலும் கடுமையை ஜைனம் கண்டிக்கிறது. ஜைனம் மாறுதல் ஸ்திரநிலை இரண்டையும் வஸ்துக்களின் முரண்பாடு இல்லாத இயற்கை ஸ்ரூபங்களாக ஒப்புக்கொள்ளுகிறது. மாறுபட்ட இரண்டு ஒருதலைக்கொள்கைகளையும் அது சமரசப்படுத்துகிறது.

எந்தப் பொருளும் மாறுதல் அடையும் போது அதில் ஒரு நிரந்தரம் நிலவுகிறது என்பதுதான் உலக இயற்கை முழுவ திலும் காணப்படும் கொள்கை. உலகில் தோன்றிய அனைத்தும் ஒரு நிலையிலிருந்து வேறொரு நிலைக்கு மாறுகின்றன. ஆனால், எதுவும், அடியோடு அழிக்கப்படுவதில்லை. மாறுதலில் நிரந்தரம் என்னும் இந்த கொள்கை ஜைனத்தில் மட்டும்தான் காணப் படுகிறது. ஒரு பொருள் வேறு பொருளாக மாறுங்காலத்திலும் அதன் அடிப்படையான வஸ்து (பதார்த்தம்) அடியோடு மாறு தல் அடைவதில்லை. உதாரணமாக இரும்புக்கம்பிகளை இரும்புச் சட்டங்களாக மாற்றலாம்; தகடுகளாக மாற்றலாம். ஆனால் இரும்பு மயம் வேறுவதில்லை.

கிறிஸ்து மதத்தின் ஒழுக்கக் கொள்கைகள் ஜைனத்துக்கு ஒத்து இருக்கின்றன. ஒரு ஆணோ பெண்ணோ தன் வாழ்க்கை யில் செய்யும் செயல்களுக்கு ஏற்பவே அவர்களுடைய தலை விதி அமைகிறது. கிறிஸ்தவத்திலோ இந்தக் கொள்கைக்கு இட மில்லை. மறுபிறவியைக் கிறிஸ்துமதம் ஒப்புக்கொள்வதில்லை.

ஆதாமும் ஏவாளும் செய்த ஆதி குற்றத்துக்காக மக்கள் இனமே தொல்லைக்கு உள்ளாக வேண்டும் என்பது பொரு த்த முடையதாக இல்லை. இன்று விவரிக்க முடியாத அளவில் உலகத்தில் நிலவிவரும் வேற்றுமைகளுக்கும் இது காரணமல்ல. என்றென்றைக்கும் மக்கள் பாவிகளாகவே இருக்கவேண்டும் என்று ஜைனம் கூறவில்லை. அவனவன் செய்த வினைக்கு ஏற்றபடி

அவனவன் அனுபவிக்க வேண்டும் என்றிருந்த போதிலும் கொடிய பாவியுங்கூட எதிர்காலத்தில் ஒருநாள் நித்திபானந் தத்தை அடைவதினின்று தடுக்கப்படுவதில்லை.

இப்போது ஒருவன் என்னதான் கொடியவனுக இருந்த போதிலும்கூட அவன் மீட்சிபெற வழியே யில்லை யென்று சொல்வதற்கில்லை. இதைக்கொண்டு தீமையை ஜைனம் கண் டிக்கவில்லை யென்று எண்ணிவிடலாகாது. அதற்கு மாருக மனிதன் பாவம் செய்யாதிருக்கும் பொருட்டுப் பாவத்தினுல் ஏற்படக்கூடிய தீமைகளை வற்புறுத்தி அவனுக்கு அடிக்கடி சொல்லப்படுகிறது.

இவ்வாருக எதை எடுத்துக் கொண்டாலும் அதற்கு இரண்டு தோற்றங்கள் உண்டு. இவ்விரண்டும் தனித்தனியாக உண்மை முழுவதையும் விளக்குவதில்லை. உதாரணமாக ஒரு வன் பிறருக்கு நன்மை செய்கிருன். தான் செய்த நன்மை யைப் பற்றி அவன் பிறரிடத்தில் விளம்பரப் படுத்தலாகாது. ஏனென்ருல் அவன் செய்த நன்மையின் உயர்வை அது இழி வாக்குகிறது. அவன் அடக்க முடையவனுயிருக்க வேண்டும். பலாபலனைக் கருதாமல் தன் கடமையெனக் கருதியே பிறருக்கு நன்மை செய்ய வேண்டும். அதுபற்றி அந்த நன்மையை அடை கிறவர்கள் அந்த நன்மையாளர்பால் அன்பு கொள்ளவோ அல்லது நன்றி கூறவோ கூடாது என்பதன்று. இதில் நன்மையாளருடைய போக்கு, நன்மையடைபவருடையபோக் குக்கு நேர் மாறுபட்டதாயிருக்கவேண்டும். அதாவது தான் ஏதும் செய்துவிடவில்லை என்று நன்மையாளர் கருதவேண்டும். தனக்குக் கிடைத்தனவெல்லாம் நன்மையாளரின் அன்பு கார ணத்தால் தான் எய்தின என்று நன்மை யடைந்தவர்கள் கூற வேண்டும்.

இந்த இரண்டு நிலைகளுக்கும் இடையே விளங்குவதுதான் உண்மை. அஃது இந்த இரண்டு நிலைகளும் இளகி ஒன்றுபடச் செய்கிறது! இந்த இரகசியத்தைத்தான் உலக மக்கள் தெளி வாக இன்னும் உணர்ந்து கைக்கொள்ளவில்லை. ஜைன தர்க்க நூல்களில் இந்த இரண்டு அம்சங்களும் பூரணமாக விவாதிக்கப் பட்டிருக்கின்றன.

ஆகவே, மனித முயற்சி மட்டும் பூரண ஆதிக்கம் தரத் தக்கதன்று. வெற்றிக்குத் தலைவிதி மாத்திரமே காரணம் என்பது மட்டும் அன்று. அதுபோலவே, எந்தச் செயலுக்கும் சுவாதீனம் (free-will) காரணம் அல்லது தலையெழுத்துத்தான் காரணம்

என்று அறுதியிட்டுக் கூறமுடியாது. உண்மை என்னவென்றால், இந்த இரண்டுமே காரணம். இதில் சந்தேகமில்லை. எல்லா விஷயங்களிலும் இவ்விரண்டுமே முடிவு கட்டுகின்றன. சில சந்தர்ப்பங்களில் இந்த இரண்டில் ஒன்று மிகவும் முக்கியமாகவும் மற்றொன்று மிகவும் அற்பமாகவும் தோன்றலாம். ஆனால் ஒன்றை நிராகரித்துவிட்டு மற்றொன்றிற்கு முழு ஆதிக்கம் கொடுப்பது அல்லது புகுத்துவது தவறு.

ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற வரையில், சிறந்த முறையில் பணியாற்ற வேண்டும் என்ற இலட்சியத்தை மேற்கொள்ள வேண்டும்; தனது ஒவ்வொரு செயலையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்; தன் தவறுதலுக்காக வருந்த வேண்டும்; தன் குறைபாடுகளை வெல்ல வேண்டும்; தன்னை அடக்கி ஆளத் தக்க ஆற்றலைப் பெறவேண்டும். இவற்றைத்தான் ஜைன சமயம் வற்புறுத்திக் கூறுகிறது.

ஆன்மார்த்த (பாரமார்த்திக)த் துறையில் விருத்தியடைய வேண்டுமானால், நம்பிக்கையும் உண்மையும் மாபெரும் குணங்களாக அமைதல் வேண்டும். மனோ வாக்குக் காயத்தினால் தூய்மை பெறுதல் வேண்டும். தான் தவறிவிடாதபடி எப்பொழுதும் மிகுந்த எச்சரிக்கையோடு இருக்கவேண்டும். இந்த உயரிய இலட்சியங்களைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தால் அவை அவனுக்குச் சித்திக்கும். ஆகவே, தோல்விகளைப்பற்றி அவன் தளர்ச்சி கொள்ளவேண்டாம். எத்தனை தோல்விகளிருந்தாலும் இடையறாது முயற்சிக்க வேண்டும். அப்போது வெற்றி உறுதி.

மனிதனுடைய நிலையும், உண்மையான முயற்சியும், அவன் அடையும் சித்தியைவிட மிக முக்கியமானவை.

நேர்மையான துறையில் இடையறாத உழைப்பும், பெருந் துன்பங்களுக் கிடையேயும் மாறாத முகமலர்ச்சியும், பாறை போன்ற மனவுறுதியும், அடுத்தடுத்துப் பல தோல்விகள் ஏற்பட்டபோதிலும் நம்பிக்கையோடிருக்கும் இயல்பும், பொறுமையோடு துன்பங்களைச் சகிக்கும் தன்மையும், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நன்மையே வெல்லும் என்னும் நம்பிக்கையும், தளராத ஊக்கமும் தான் உண்மை ஜைனத்தின் பண்புகள்.

ஜைன சமயத்தின் தத்துவங்கள் எங்கும் பரவுமானால், உலக மக்களிடையே இரக்கம் உண்டாவதற்கும் அவற்றின் மூலம் மக்கள் இனம் இனிது வாழ்வதற்கும் வழிபிறக்கும். ஜைன சமயம் உலக முழுவதிற்கும் ஒத்த - என்றென்றும் நிலையான -

உண்மைகளைப் பற்றியே கூறுகின்றது. அது மிகமிகப் புராதன மானதோர் மதமாக இருந்த போதிலும் அதன் நிலையான உண்மைகளே அச்சமயத்திற்கு இப்பொழுதும் பெருமையைத் தருகின்றன.

பிறவி, பதவி, பொருள், செல்வாக்கு ஆகியவற்றை அடிப் படையாகக் கொண்டு மனிதனால் இயற்றப்பட்ட சம்பிரதாய வேறுபாடுகள் அறிவுக்குப் பொருந்தாதவை; அர்த்தமற்றவை. ஆகவே அவற்றை ஜைனம் அங்கீகரிப்பதில்லை. எனினும் வேற் றுமைகள் இல்லை என்றோ, எல்லோருக்கும் சமத்துவமென்றோ கூறும் தவற்றினை அது செய்வதில்லை. திறமை ஒன்றுதான் அந்த வேறுபாட்டிற்குக் காரணமாகும். சிறந்த பண்பு, திறமை, தகுதி ஆகியவையே உண்மையுயர்வை வேறுபடுத்திக் காட்ட வல்லன. ஜைனம் உண்மைக்கு விரோதமாக எதையும் உப தேசிப்பதில்லை.

ஜைனம் சாத்திய நோக்கில் மக்கள் அனைவரும் சமம் என்னும் உயரிய உண்மையை ஒப்புக் கொள்ளுகிறது. என்ற லும் அந்த உயரிய இலட்சியமான சமத்துவ நிலையை இந்த உலகில் அடைய முடியாது என்று அது தெளிவு படுத்துகிறது. ஏனென்றால், பலவகைப்பட்ட வேற்றுமைகள் இவ்வுலகில் மலிந்து கிடக்கின்றன. தற்காலத்திய மக்களுக்கு உண்மைகள் இனிப்பதில்லை. ஆனால் ஆடம்பரமான கொள்கைகளே இனிக் கின்றன. அதன் பயனாக நீதியின்மையும், உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசும் தன்மையும் மக்களிடையே வேரூன்றிக் கொண்டன.

ஒரு பெண் வாயளவில் சமத்துவம் பேசிக்கொண்டிருந் தாள். அவள் வீட்டு வேலைக்காரனோடு அவளும் தானும் விருந் துண்ணலாம் என்று டாக்டர் ஜான்சன் அவளிடம் கூறியபோது அவளுக்கு மகத்தான கோபம் வந்தது. இந்தக் கதை அதற்கு ஒப்பாக விருக்கிறது.

உயர்ந்தோராயினும், தாழ்ந்தோராயினும் செய்யும் குற்றம் குற்றமே. ஆன்மார்த்தத் துறையில் விருத்தி பெற்றுள்ளவர்களுக் குப் பொறுப்பு மிக மிக அதிகம். ஆகையால் மதத்தின் பேரால் அவர்கள் மக்களைச் சூறையாடிக் கொடுந் தொல்லைகளுக்கும் துயரங்களுக்கும் உள்ளாக்குவது ஒரு கொடிய குற்றமாகும். கடைசியில் பூரணத்துவம் அடைந்து, புனித நிலையில் ஒன்று பட்டுள்ள இடத்தில் மட்டும் தான் சமத்துவம் அமையும். அங்கே, அந்த நிலையில், மீட்சிபெற்ற ஒவ்வொரு ஆன்மாவும் நிரந்தரமாக

வாழும்; நித்தியானந்தத்தை அனுபவிக்கும். இதன் கடைசியில் ஒரு ஜைனனுடைய விவரணம் விளக்கிக் கூறுவேன்.

உலகத்திலேயே மிகவும் சாவதானமுள்ள அறிவாளி ஜைனன்தான். ஏனென்றால் உலகில் இன்று பரவியிருக்கும் மயக்கங்கள் (தடுமாற்றங்கள்) அவனை ஒருபோதும் அணுகுவதில்லை. இது ஆச்சரியமாகத் தோன்றலாம். என்றாலும், உலகத்தில் எதையும் சாதிக்கக்கூடும் என்னும் உயர்வான பண்பு அவனிடம் உண்டு. அவன் ஏழையாகவும், மிகுந்த அல்லல்களுக்கு உள்ளாகிடும் அருவருக்கத்தக்க நிலையிலுமிருக்கலாம். நியாயமற்ற முறையில் துன்பத்துக்கு உள்ளாகலாம். அவசியமான இழுக்கிற்கு உள்ளாகலாம். அவமானப்படுத்தப்பட்ட கொடுமைகளுக்கும் உள்ளாகலாம். உயரிய பண்புகள் அமைந்த நல்ல நேர்மையான ஒருவனுக்கும் இவை நேரக்கூடும். ஒருகால், அவனுடைய சிறந்த நல்ல தன்மை காரணமாகவே அவன் துன்பப்பட நேரலாம். நேர்மையான செயல்கள் இழிவாக அவமதிக்கப்படுவதையும், நேர்மையற்ற கொடுமைகள் செழித்தோங்குவதையும் அவன் பார்க்கலாம்.

எவைபற்றி மனத்தளர்வடைந்த போதிலும் தன்னெறியினின்றும் அவன் பிறழுவதில்லை. தன்னைத் துன்புறுத்தியவர்கள் மீது மனக்கசப்போ, விரோதமோ கொள்வதில்லை. எந்தக் காரணம் பற்றியும் அவன் ஜன விரோதியாக மாட்டான். மகா கொடிய நிலையிலும் அவன் திட நம்பிக்கை தளர்ச்சியடைவதில்லை. எப்படிப்பட்ட நிலையிலும் ஒரு சிறிதும் கோபம் கொள்ளலாகாது என்றும், பொறுமையை மேற்கொள்ள வேண்டுமென்றும் தன் மதம் போதிப்பதை நடைமுறையில் கொண்டு வருவது தன்னால் இயலாதென்று அவனுக்குத் தெரியும். ஏனென்றால் அவன் ஒரு பலவீனன். பல வகைகளில் தன் இலட்சியப்படி நடந்துகொள்ள அவனால் இயலவில்லை என்பது அவனுக்குத் தெரியும். இந்த வகையில் திடமில்லாத மக்களில் அவன் ஒருவனாகின்றான். ஆனால் அவனிடமுள்ள ஒரு பெருமை என்னவென்றால், அவன் கடவுளை வைவதில்லை. தனக்கு மீட்சியுண்டு என்னும் நம்பிக்கையையும் அவன் இழப்பதில்லை. ஆயிரம் முறை தோற்றாலும் தனது சோர்வுக்காக அவன் வருந்துகிறான். இடையறாது கடைசிவரை முயலுகின்றான். பொதுமக்களுக்கும் அவனுக்குமுள்ள வேற்றுமை அதுதான். இதில் உள்ள மகா முக்கியமான உண்மை என்னவென்றால், அவன் எந்தக் காரியத்தைச் செய்தாலும் அதில் உண்மையே துலங்குகிறது. அவன் உலகத்தை ஏமாற்றுவதில்லை. தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்

வதுமில்லை. அவனது செயல்களும் மொழிகளும் வெளிப்படையானவை. கபட நிலையை அவன் அருவருக்கிறான். தன் குற்றங்களைக் கடுமையாகக் கடிகிறான்.

உலகத்தில் பலாத்காரமும் வேற்றுமைகளும் கொடுமைகளும் நிறைந்திருக்கின்றன என்று ஜைனனுக்குத் தெரியும். நியாயமான தன்மை மிகமிக அரிதாயிருக்கிறது. நல்லன புரிவதற்கு இவை இடர்ப்பாடாகக் குறுக்கிடுகின்றன. என்ன தொல்லைகள் நேர்ந்த போதிலும்கூட அவை அவனுடைய உள்ளத்தின் உறுதிப்பாட்டைக் குலைப்பதில்லை. தொல்லைகள் சேரும் காலத்தும் அவன் அஞ்சுவதில்லை. மனத்திற்குக் களிப்பைத்தரும் வழிகள் அவனுடைய மனத்திண்மையைக் கலைப்பதில்லை. தொல்லைகளை அவன் வரவேற்பதில்லை. ஆனால் அவை வந்தால் அவை குறித்து அவனது மனத்திண்மை குறைவதில்லை. அந்தத் தொல்லைகளை எதிர்த்துப் போராடவும் அவன் தவறுவதில்லை. அது அவனால் முடியும். நன்னடத்தையில் அவனுக்கு நம்பிக்கையுண்டு. நல்ல பூரணமான அறிவின் பயன்தான் அந்த நன்னடத்தை. அந்த நன்னடத்தை ஒரு சம்பிரதாயத்தை ஒட்டியோ அல்லது தானாகவோ, அவனுக்கு வாய்ப்பதில்லை என்று கருதப்படுகிறது உண்மையான நிரந்தரமான இன்பத்தை அடைவதற்கு அது ஒன்றுதான் தலை சிறந்தவழி என்பதுபற்றி அவன் சிறிதும் ஐயம் கொள்ளுவதில்லை.

இந்தப் போக்கு தற்காலத்தில் செலாவணியில் இல்லை. என்றாலும் உலகில் உள்ள எல்லா உபரிப மதங்களும் இதன் முக்கியத்துவத்தை வற்புறுத்திக் குறிப்பிட்டிருப்பது பெரிதும் ஆச்சரியப்படத்தக்கதே!

இவையே 'ஸீரை'யின் கொள்கைகள். கிறிஸ்துவின் கொள்கையும் இதுவே. இந்துமத வேதங்களிலும் இதுவே வற்புறுத்தப் பட்டிருக்கிறது. 2500 ஆண்டுகட்கு முன்னதாகக் கடைசி தீர்த்தங்கரரான மகான் மஹாவீரர் பூரணத்துவம் அடையும் வழியை உலகுக்குப் போதித்தார். அந்தப் பூரண நிலைதான் மக்களின் இலட்சியமாக இருத்தல் வேண்டும். அதே துறையில் சென்று உலகில் கிடைக்கத்தக்க பேரின்பத்தை எளிதில் பெறலாம். பின் கூறிய இலட்சியத்தை அடைவது அவ்வளவு கடுமையல்ல. ஆகவே, பூரணத்துவம் அடையும் கடுமையான துறையைப் பின்பற்றிச் செல்ல முடியாத பெருவாரியான மக்கள் எளிதில் அதை அடைய இது ஒரு வழியாகும்.

மக்களைச் சந்தேகங்கள், அச்சங்கள், தொல்லைகள், ஆகியவை பிடிக்கின்றன. மக்கள் என்ன செய்வோம் என்ற ஏக்

கத்திற்கு உள்ளாகின்றனர். உலகில் கோடிக்கணக்கான மக்கள் இந்த நிலையில்தானிருக்கிறார்கள். அவர்களை மீட்க அவர்களுக்கு ஜைன சமயத்தின் உன்னதமான உண்மை வழி திறக்கட்டும்!

துறவு வழியை நாம் பின்பற்றவும், ஜைனத்தின் உன்னதமான இலட்சியங்களின் வழியே நாம் நடக்கவும் ஏற்ற மனவுறுதியையும் உள்ளத்தின் திண்மையையும் கடவுளுடைய மொழிகள் வழங்குவனவாக!

ஜைனசமயத்தின் நித்தியமான - ஆதியந்தமில்லாத - உண்மைகளை எடுத்துப் பிறர்க்குப் போதிப்பது மகா மேன்மையானதொருபணி. திசை தப்பித் தவிக்கும் மக்களுக்கு அதன் மூலம் இன்பம் கிடைக்கும். ஆகவே இந்த உன்னதமான பணியை நாம் செய்து வெற்றி பெறுவோமாக!

ஆங்கிலப் பேராசிரியர்

**எஸ். ஏ. ஜைன், எம். ஏ. அவர்கள்**

ஆங்கிலத்திற்கூறிய "ஜைனதருமம்"

தமிழாசிரியர்

**சுகவனம் - சிவப்பிரகாசனாரால்**

மொழிபெயர்க்கப்பெற்றது

முற்றிற்று.

Oriental Printing Works, Madras. Q.H. No. MS. 511 2000 1.4.47

15-10-96

6A
3-89